## திராவிட இயக்க இதழ்கள் - ‘தி சண்டே அப்சர்வர்’


The Sunday Observer
Kesavaram & Co.,

நீதிக்கட்சித் தலைவர்களிடையே ‘பி.பா’ என்று அறியப்பட்ட பி.பால சுப்பிரமணியம் என்பவரால் ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தப்பட்ட இதழ், ‘தி சண்டே அப்சர்வர்’. நீதிக்கட்சிக் கொள்கைகளை ஆங்கிலேயரிடையே எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது இந்த இதழ். அதற்காகவே அவருக்குத் தனி அச்சு இயந்திரத்துடன் கூடிய அச்சகம் மற்றும் ஒரு காரையும் அன்றைய சென்னை மாகாண தலைமை அமைச்சர் பொப்பிலி அரசர் அன்பளிப்பாக அளித்ததாக ஒரு தகவல் உண்டு.

1933-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், முதல் இதழ் வெளிவந்தது. சென்னையிலிருந்து வெளிவந்த இது, வார இதழாக மலர்ந்தது. இதழுக்கு அட்டைப்படம் என்று எதுவுமில்லை. இதழின் முதல் பக்கத்திலிருந்தே கட்டுரைகள் அச்சிடப்பட்டுள்ளன. விளம்பரங்களும் இடம் பிடித்துள்ளன.

அரசியல், இலக்கியம், அறிவியல், உலக செய்திகள் ஆகியவற்றைத் தாங்கி, 14 பக்க இதழாக இது வெளியாகி இருக்கிறது.

காந்தியின் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தின்போது நிகழ்ந்த வன்முறைகள் தொடர்பான கட்டுரை ஒன்றில் காந்தியைக் கண்டித்ததற்காக, இதழ் ஆசிரியர் மீது வழக்குத் தொடுத்தார் ராஜாஜி. மூன்றாண்டுகள் நடந்த அந்த வழக்கில் வழக்கறிஞர் வைத்துக்கொள்ளாமல் தானே வாதாடி, வழக்கில் வெற்றி பெற்றார் பாலசுப்பிரமணியம். பின்னாளில் தனது இதழுக்காக காந்தியைப் பேட்டியும் எடுத்தார் பி.பா.

## ஃப்ளாஷ்பேக்


செ.திவான்



### நெல்லையில் தலைவருடன்...

1976-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை கால வழக்குகளுக்காக நிதி திரட்டும் நிகழ்ச்சி, திருநெல்வேலியில் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையேற்க நடைபெற்றது. நெல்லை சங்கீத சபாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரட்டிய நிதியை தலைவரிடம் அளித்தோம். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

– செ.திவான், எழுத்தாளர்,
திராவிட இயக்க வரலாற்று ஆய்வாளர்,
திருநெல்வேலி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சட்டமேலவைக் கலைப்பும் முரணும்!

1986-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 14-ஆம் தேதி, தமிழ்நாட்டில் செயல்பட்ட சட்டமேலவையைக் கலைக்க பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ‘மேலவைக் கலைப்பு திடீரென்று எடுத்த முடிவல்ல, ஏழெட்டு மாதங்களாக அமைச்சரவையில் ஆலோசித்து, முதலமைச்சர் எம்.ஜி.ஆர் எடுத்த முடிவு’ என்றார் நாவலர். ஆனால், அதற்கு முன், 9-ஆம் தேதி, இது தொடர்பாக கழக உறுப்பினர் ரகுமான்கான் கேட்ட கேள்விக்கு, “சட்டமேலவையைக் கலைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை” என அறிவித்திருந்தார் நாவலர்.

## முதன் முதலில் 25

ந.வினோத்குமார்

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**



# உழைப்புக்கொரு கணையாழி!

தொண்டர்களின் உழைப்பை, தியாகத்தை, மதிக்கவும் போற்றவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே தவறியதில்லை. அவர்களின் உழைப்புக்கு அங்கீகாரம் தரும் விதமாக ‘கணையாழி’, அதாவது மோதிரம் அணிவிப்பது என்பது நம் கழகத்தில் மட்டுமே காணக்கூடிய ஒரு மரபு.

முதன் முதலில் அப்படி மோதிரப் பரிசு பெற்றவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். அதுவும் பாசத்துக்குரிய அவருடைய, நம்முடைய பேரறிஞர் அண்ணாவிடமிருந்து..!

இது நடந்தது, 1959-ஆம் ஆண்டில்..! அப்போது சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் நூறு இடங்களுக்கு 402 பேர் போட்டியிட்டனர். கழகத்தின் சார்பாக 90 பேர் களம் கண்டனர். அவர்களில் 45 பேர் வென்றனர். கலைஞர்தான் இந்தத் தேர்தலில் கழகத்தின் சார்பாக 90 பேர் நிற்க வேண்டும் என்றார். ஆனால், அண்ணா அவர்களுக்கு அத்தனை பேரை நிறுத்துவதில் விருப்பமில்லை.

இதுகுறித்து அவர்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தையை கலைஞர் தனது ‘நெஞ்சுக்கு நீதி’ முதல் பாகத்தில், ‘அண்ணா அணிவித்த கணையாழி’ என்ற 72-ஆம் அத்தியாயத்தில் இப்படி விவரிக்கிறார்:

“90 பேர்களில் எத்தனை பேர்கள் வருவார்கள் என்று எண்ணுகிறாய்?” இது அண்ணாவின் கேள்வி.

“நிச்சயம் 40 பேருக்கு மேல் வெற்றியடைவார்கள்” என்பது என்னுடைய பதில்.

“அப்படி 40 பேர்கள் வெற்றியடைந்தால் நான் உனக்கு என் சொந்தச் செலவில் ஒரு கணையாழி அணிவிக்கிறேன்” என்று அண்ணா என்னிடம் ஒரு பந்தயமே கட்டினார். இறுதியாகத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, கழகத்தின் சார்பில் 45 பேர் வெற்றி பெற்றார்கள்.”

**கழகத்தின் பல மேடைகளில், கழகத்தினர் பலருக்கு அவர்களின் உழைப்பைப் பாராட்டி கணையாழிகள் அணிவிக்கப்பட்டுள்ளன. அந்த மரபு இன்றும் தொடர்கிறது.**

அந்தத் தேர்தலைத் தொடர்ந்து 1959-ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற வெற்றி விழா கூட்டத்தில் கலைஞருக்கு, அண்ணா அவர்கள் ஒரு பவுனில் தங்க மோதிரம் அணிவித்தார்.

அதற்குப் பிறகு 1971-இல் தேர்தல் பிரச்சார நாடகமான ‘முரசே முழங்கு’ 40-வது நாடக நிறைவு நிகழ்ச்சியைப் பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள், இன்றைய நமது கழகத் தலைவர், ‘திராவிட மாடல்’ நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு கணையாழி அணிவித்தார்.


இந்த இரு முக்கிய நிகழ்வுகளுக்குப் பிறகு, கழகத்தின் பல மேடைகளில், கழகத்தினர் பலருக்கு அவர்களின் உழைப்பைப் பாராட்டி கணையாழிகள் அணிவிக்கப்பட்டுள்ளன. அந்த மரபு இன்றும் தொடர்கிறது.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை 25

கௌதம் ராஜ்

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# காஷ்மீரத்து சிங்கம்!

தனது பேச்சாற்றலால் ‘காஷ்மீரத்து சிங்கம்’ என்று அறியப்பட்டவர், ஷேக் முகமது அப்துல்லா. குரான் வரிகளோடு அரசியல் சிக்கல்களையும் இணைத்துச் சொற்பொழிவாற்றும் திறமையையும் அவர் பெற்றிருந்தார். எளிய குடும்ப பின்னணியில் பிறந்திருந்தாலும், அரசியலில் மிகப்பெரிய இடத்தை அடைந்தவர். 10 ஆண்டுகள் கழித்து காஷ்மீருக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் அவரது வாழ்க்கையோடு இணைந்த காஷ்மீரின் வரலாற்றை அறிந்து கொள்வது அவசியம்.

**காஷ்மீர் அரசியலில் இந்திய அரசு எந்த அளவிலான தாக்கம் செலுத்தியது என்பதை இந்த நிகழ்ச்சி துல்லியமாக பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம்.**

அந்த வகையில் வரலாற்று எழுத்தியலில் ஆழங்கால் பதித்தவராக அறியப்படும் சித்ரலேகா ஜூட்ஷ் எழுதி, சமீபத்தில் வெளியான புத்தகம், *‘SHEIKH ABDULLAH: THE CAGED LION OF KASHMIR’*

பிரிட்டிஷ் காலனிய ஆட்சியிலிருந்து விடுபட்டு, புதிதாக உருவான இரண்டு தேசங்களுக்கு இடையில் சிக்கிக் கொண்ட பிராந்தியம் காஷ்மீர். நேருவின் நிறைவேற்ற முடியாத உத்தரவாதத்தால் வஞ்சிக்கப்பட்ட பகுதியும்கூட. இன்றைக்கு ARTICLE -370 நீக்கப்பட்டு ஒன்றிய பிரதேசமாக இருக்கும் காஷ்மீருக்கு முதல் பிரதமராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஷேக் முகமது அப்துல்லா.

காஷ்மீரின் விதியை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்து, அதன் காரணமாகச் சிறையில் அடைக்கப்பட்டு, நேருவின் மறைவுக்குப் பிறகு மக்களின் நம்பிக்கையை இழந்து, பல்வேறு அக மற்றும் புற நெருக்கடிகளால் இந்திரா காந்தியுடன் சமரசம் செய்துகொண்டு முதலமைச்சரானவர் அப்துல்லா. சமரசத்திற்கு வயது மூப்பு முக்கிய காரணமாக இருந்தது.

பனிப் பொழிவை விடவும் புல்லட் பொழிவை அதிகம் பார்த்த காஷ்மீரைப் போலவே ஷேக் முகமது அப்துல்லாவின் வாழ்க்கையும் சூழ்ச்சிகளும் துரோகங்களும் நிறைந்த சிக்கலான ஒன்று என்பதை இப்புத்தகம் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. ஒரு கட்டத்தில் அப்துல்லா சர்வதேச அளவில் காஷ்மீரின் முகமாகத் திகழ்ந்தார். அவர் காஷ்மீரில் ஒரு இஸ்லாமியராகவும் இந்தியாவிற்கு மதச்சார்பற்றவராகவும் இருக்க வேண்டியதாக இருந்தது. இரண்டு அடையாளங்களிற்கும் நியாயம் செய்பவராக அவர் விளங்கினார்.

இந்த வாழ்க்கை வரலாற்று நூல், இந்தியா என்ற உருவாகாத தேசத்தின் வரலாற்றையும் காஷ்மீர் என்று உருவாகத் தவறிய தேசத்தின் வரலாற்றையும் இந்த இரண்டுக்கும் இடையில் தனது இறுதிக் காலம் வரை சிக்கித் தவித்த காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் வரலாற்றையும் கொண்ட ஒன்றாக வெளியாகி இருக்கிறது. 8 அத்தியாயங்களாக விரியும் இந்நூல், ஷேக் அப்துல்லாவின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கை நிகழ்வுகளை கோர்வையாக நமக்குத் தெரிவிக்கிறது.

காஷ்மீரின் விடுதலையை அந்தப் பகுதி மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும், அதற்காக பொதுவாக்கெடுப்பை (PLEBISCITE) நடத்த வேண்டும் என்று கர்ஜித்த அப்துல்லாவின் மறைவை ஒட்டி அவருக்கு இந்திய மூவர்ணக் கொடி போர்த்தி மரியாதை செய்யப்பட்டது, காஷ்மீர் அரசியலில் இந்திய அரசு எந்த அளவிலான தாக்கம் செலுத்தியது என்பதை இந்த நிகழ்ச்சி துல்லியமாக பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம்.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 575

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.